மூன்றாவது தேர்ச்சி : இறைகட்டளைகளைப் பின்பற்றுவதன் வழியாக மனித உறவுகளை வளர்த்துக் கொள்வர்

15

## 3.3. ஆக்கத்திற்கு வழிவகுக்கும் எமது ஆற்றல்கள்



- மேலேயுள்ள படத்தில் காண்பவை பற்றி கலந்துரையாடுங்கள்.
- இறைவன் உமக்கு அளித்துள்ள திறமைகள் ஐந்தினை எழுதுக.

இரண்டு கைகளையும் இழந்து வலுவிழந்த சிறுமியின் செயல் எமக்கு பிரமிப்பை ஊட்டுகின்றது. இத்தகைய மாற்று வலுவுள்ளோரை எமது சமூகத்தில், நாட்டில், உலகில் காண்கின்றோம். இவ்வுலகில் படைக்கப்பட்ட வலுவுள்ளோருக்கும் மாற்று வலுவுள்ளோருக்கும் பின்வரும் நற்செய்தி மூலம் அறை கூவல் விடுக்கின்றார். இயேசு, நம்மைக் கரைத்து பிறருக்கு சுவைகொடுப்பவர்களாக, பயனுடையவர்களாக வாழ அழைக்கின்றார்.

நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும்; வேறு ஒன்றுக்கும் உதவாது.

மத். 5:13

உப்பு முக்கியமான ஒன்று. உப்பு கரைந்து சுவை தருகின்றது. நாமும் அடுத்தவர் நலனுக்காக உழைக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்வு தியாகம் நிறைந்தவாழ்வு எனவே அர்த்தமுள்ள தியாகம் நிறைந்த செயல்களால் நமது குடும்பத்திற்கு பாடசாலைக்கு, பங்கிற்கு நன்மை செய்ய முடியும்.


உலகிற்குத் உப்பாவேன்
பிறர் வாழ்விற்குச் சுவை கொடுப்பேன்.

நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாயிருக்க முடியாது. எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை. மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்பொழுது தான் அது வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளி தரும். இவ்வாறே உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்.

(மத்.5:14-16)

நாம் விளக்கைப் போன்று பிறருக்குப் பயன்படுபவர்களாக வாழவேண்டும் என இயேசு எமக்கு எடுத்துரைக்கின்றார். எம்மிடமிருந்து பயனடைந்த அனைவரும் வானகத் தந்தையைப் போற்றுவர். அவரை மகிமைப்படுத்துவர். அத்துடன் எமது திறமைகளை வெளிக்கொணர்ந்து செயற்படும் போது இறையாட்சிக்கு சான்று பகர்பவர்களாவோம்.

பிரபலமான மேதைகள் தங்களது திறமைகளைப் பயன்படுத்தி உலகை ஒளிர்வித்தார்கள். இவ்வுலகில் நாம் பெற்றுக்கொண்ட திறமைகளை அர்த்தமுள்ள முறையில் சமூக வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவோம்.



ஒளியாய்ப் பொழிந்தவனே
வழியென மொழிந்தவனே
எழுவாய் வாழ்வினிலே

வாழ்க்கை நூலை வரையும் காலை
வார்த்தை தேடி நின்றேன்
இறை வார்த்தையான நீயே வான
வார்த்தையை வழங்கிடுவாய்
எந்தன் வாழ்க்கையாய் விளங்கிடுவாய்

செயற்பாடு:

- உமது வீடு, வகுப்பறை, ஆலயம் போன்றவற்றில் உப்பாக உலகின் ஒளியாக எவ்வாறு செயற்படுவீர்?.

| வீடு | வகுப்பறை | பங்கு ஆலயம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

- எம்மிடம் உள்ள திறமைகளை இனங்காண்போம்:
    - இனிமையாகப் பாடுதல்
    - சொல்வளத்துடன் பேசுதல்
    - திறமையாக விளையாடுதல்
    - ..........................................................................................
    - ..........................................................................................
    - ..........................................................................................
    - ..........................................................................................
    - ..........................................................................................

இயேசு எருசலேமை நெருங்கி வந்துகொண்டிருந்தார். அவர் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் இறையாட்சி உடனடியாகத் தோன்றப்போகிறது என்று நினைத்தார்கள். அப்போது இயேசு மேலும் ஓர் உவமையைச் சொன்னார்: உயர் குடிமகன் ஒருவர் ஆட்சியுரிமை பெற்றுவரத் தொலை நாட்டிற்குப் போகப் புறப்பட்டார். அப்போது அவர் தம் பணியாளர்கள் பத்துப் பேரை அழைத்து, பத்து மினாக்களை அவர்களிடம் கொடுத்து அவர்களை நோக்கி, நான் வரும் வரை இவற்றை வைத்து வாணிகம் செய்யுங்கள் என்று சொன்னார். அவருடைய குடிமக்களோ அவரை வெறுத்தனர். எனவே, இவர் அரசராக இருப்பது எங்களுக்குத் விருப்பமில்லை என்று சொல்லித் தூது அனுப்பினர். இருப்பினும் அவர் ஆட்சியுரிமை பெற்றுத் திரும்பி வந்தார். பின்னர் தம்மிடம் பணம் வாங்கியிருந்த பணியாளர் ஒவ்வொருவரும் ஈட்டியது எவ்வளவு என்று அறிய அவர் அவர்களைக் கூப்பிட்டு அனுப்பினார்.

முதலாம் பணியாளர் வந்து, ''ஐயா, உமது மினாவைக் கொண்டு பத்து மினாக்களை சேர்த்துள்ளேன் ''என்றார். அதற்கு அவர் அவரிடம், 'நன்று, நல்ல பணியாளரே, மிகச் சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பத்து நகர்களுக்கு அதிகாரியாய் இரும் 'என்றார். இரண்டாம் பணியாளர் வந்து, 'ஐயா உமது மினாவைக் கொண்டு ஐந்து மினாக்களை ஈட்டியுள்ளேன்' என்றார். அவர், 'எனவே நீர் ஐந்து நகர்களுக்கு அதிகாரியாய் இரும்' என்று அவரிடம் சொன்னார்.

வேறொருவர் வந்து, 'ஐயா, இதோ உமது மினா. ஒரு கைக்குட்டையில் முடிந்து வைத்திருக்கிறேன். ஏனெனில் நீர் கண்டிப்புள்ளவர் என்று உமக்கு அஞ்சி இப்படிச் செய்தேன். நீர் வைக்காததை எடுக்கிறவர்; நீர் விதைக்காததை அறுக்கிறவர்' என்றார். அதற்கு அவர் அவரிடம், 'பொல்லாத பணியாளே, உன் வாய்ச் சொல்லை கொண்டே உனக்குத் தீர்ப்பிடுகிறேன். நான் கண்டிப்பானவன்; வைக்காததை எடுக்கிறவன்; விதைக்காததை அறுக்கிறவன் என உனக்குத் தெரியுமல்லவா? அப்படியானால் ஏன் என் பணத்தை வட்டிக் கடையில் கொடுத்து வைக்கவில்லை? நான் வந்து அதை வட்டியோடு சேர்த்துப் பெற்றிருப்பேனே' என்றார். பின்பு அருகில் நின்றவர்களிடம், 'அந்த மினாவை அவனிடமிருந்து எடுத்து, பத்து மினாக்கள் உள்ளவருக்குக் கொடுங்கள்' என்றார். அதற்கு அவர்கள், 'ஐயா, அவரிடம் பத்து மினாக்கள் இருக்கின்றனவே' என்றார்கள். அவரோ, 'உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும். இல்லாதோரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும் என உங்களுக்குச் சொல்கிறேன்' என்றார்.

லூக்கா 19:11-26

எமது ஆற்றல்கள் திறமைகள்

- இறைதந்தை எமக்களித்த கொடைகள்.
- அவற்றை நாம் விருத்தி செய்ய வேண்டும்.
- மற்றவர்களின் தேவைக்குப் பயன்படுத்த வேண்டும்.
- நன்மை செய்வதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
- பிறர் திறமையை வளர்க்க முயன்றால் எம் திறமை வளரும்.
- இறை மனித உறவை வளர்க்க முடியும்.

## செயற்பாடு

1. இறைவன் உமக்கு அளித்துள்ள திறமைகளை எவ்வாறு வளர்ப்பீர்?
2. அடுத்தவரது திறமைகளைச் சமுதாய வளர்ச்சிக்காக எவ்வாறு பயன்படுத்தலாம்?
3. உமது திறமைகளைத் தகுந்த முறையில் பயன்படுத்துவதால் நீர் பெறும் கைமாறு என்ன?

**மற்றவர்கள் திறமைகளை வளர்க்க எமது திறமைகளைப் பயன்படுத்த முன்வருவோம்.**

இன்று மனிதன் தன் திறமைகள் ஆற்றல்களைப் பயன்படுத்தி எத்தனையோ நவீன உபகரணங்களையும், தொடர்புசாதனங்களையும் கண்டுபிடிக்கின்றான். துரிதகதியில் விஞ்ஞானம் வளர்ச்சியடைய கண்டுபிடிப்புக்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. இத்தகைய கண்டுபிடிப்புக்கள் மனிதனை ஆக்கப்பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டுமே ஒழிய அழிவுப் பாதைக்கு அல்ல.

எம்மிடம் உள்ள திறமைகளை விருத்தி செய்து வாழும் போது இறைத்தந்தை அனைத்தையும் எமக்குக் கொடுப்பார். எமது ஒவ்வொரு செயலும் இறைத்தந்தைக்கு ஏற்புடையதாக அவரை மகிமைப்படுத்தி அவரை அணுக வேண்டும். நாம் இறையாட்சியைத் தேடும் போது எமது வாழ்வுக்கு தேவையான அனைத்தும் இறைத்தந்தையால் அருளப்படும்.

- ♦ லூக். 12:22-34 இல் குறிப்பிட்டுள்ளபடி இறைத்தந்தையை எமது அன்றாட வாழ்வில் அனுபவிக்க வேண்டும்.

## செயற்பாடு

 நவீன கண்டுபிடிப்புக்களைப் பெயரிட்டு அவற்றின் நன்மை தீமைகளைக் குறிப்பிடுங்கள்

| கண்டுபிடிப்புக்கள் | நன்மைகள் | தீமைகள் |
|---|---|---|
| உ + ம் தொலைபேசி | சரியான செய்திகளை தெரிவித்தல் | தவறான வதந்தியை பரப்புதல் |
| | | |
| | | |
| | | |

 1. அன்றாட வாழ்விற்கு நீர் பெறும் படிப்பினைகள் எவை?

2. கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய நோக்கம் என்ன?

3. இறைத்தந்தை மனிதனுக்கு அளித்த ஆற்றல்கள் திறமைகள், ஆக்கத்திற்கே ஒழிய, அழிவுக்கல்ல என்ற தலைப்பில் சஞ்சிகைக்கு ஒரு சிறு ஆக்கம் தயாரிக்குக.

### வாழ்க்கைக்கு

நாம் பெற்றுக்கொண்ட கொடைகள், திறமைகள், ஆற்றல்கள் வழியாக இறைவனை மகிமைப்படுத்துவோம். அடுத்தவர் நலனுக்காக இவற்றைப் பயன்படுத்தும் பொழுது இறைவனை மகிமைப்படுத்துகிறோம்.